திரு. வை. பாலசுந்தரம்: கங்கைகொண்டசோழபுரத்தில் உள்ள சிற்பங்கள் பிரகதீஸ்வரர் கோவிலில் இருக்கிற சிற்பங்களை விட மிக நுணுக்கமான சிற்பங்கள், அழகான சிற்பங்கள் என்று கூறுகிறார்கள். அப்படிப்பட்ட சிற்பங்களைப் பார்க்கச் செல்கிற சிலர் அவற்றின் கண்களைக் குத்தியும், மூக்கைக் குத்தியும் கேவலப்படுத்தும் நிலையில் இருப்பதால் அதை மத்திய அரசு எடுத்துக்கொள்கிற வரையில் நாம் தமிழக அரசே எடுத்துப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கங்கைகொண்ட சோழபுரம் கோவில் இன்று மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ்தான் இருந்துவருகிறது. அதைப் பழுதுபார்த்து கலனாகாத அளவிற்கு பார்த்துக்கொள்ளவேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறோம். தமிழக அரசிடம் அதைக் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தியுங்கூட கொடுக்காது மத்திய அரசின் கீழ் அது இருந்து வருகிறது.

திரு. கு. காமாட்சி: மாநில அரசின் நிர்வாகத்தின்கீழ் இருக்கிற கோவில்கள் மிகவும் அழகாக இருக்கின்றன. அடிக்கடி பழுதுபார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், மத்திய அரசின் நிர்வாகத்தின்கீழ் உள்ள கோவில்கள் எல்லாம் பழுதடைந்து கிடக்கின்றன. அவர்கள் அந்தக் கோவில்களை எல்லாம் எப்படிப் பராமரிக்கிறார்கள் ? மாநில அரசின் மூலமாகவா அல்லது அதற்காகத் தனி இலாகா அமைத்து, தனி அதிகாரிகளை நியமித்து அவர்கள் மூலம் செய்துகொண்டுவருகிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மத்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறைக்கு இன்று கிளை அகங்கள் எல்லாம் இங்கு இருக்கின்றன. தென் மண்டலத்தைப் பொறுத்தவரையில் ஒரு பணிமனை இருந்து வருகிறது. அந்த அலுவலகத்தில் உள்ள அலுவலர்கள் இந்தப் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒதுக்கக்கூடிய பணம் போதவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசு அதிகப் பணம் ஒதுக்கவேண்டுமென்று நாமும் வலியுறுத்தி வருகிறோம். இந்த ஆண்டு சில திட்டங்களை மேற்கொண்டிருக்கிறார்கள்.

பின்தங்கிய வகுப்பினருக்குக் குடியிருப்புகள்

*668 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் வசிக்கும் சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர் ஆகியோர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இப்படிப்பட்டவர்கள் சமுதாயத்தில் மிகவும் பிற்பட்ட ஒரு சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதன் பொருட்டாவது அவர்களுக்கும் இந்தமாதிரி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு மறு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : வீட்டுவசதி வாரியம் ஐந்து சத விகிதம் மனைகளைச் சலவையாளர்களுக்கும், முடி திருத்துவோருக்கும் ஒதுக்கவேண்டுமென்றுஅரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் வீட்டு வசதித் தேவைகளை வாரியத்தின்மூலம் சலவையாளர்களும், முடிதிருத்துவோரும் பெற வாய்ப்புண்டு.

Economically Backward People

* 669 *Q.*—THIRU N. K. PALANISAMY : **Will the Hon. the Minister for Backward Classes be pleased to state whether this Government have received any communication from the Centre during 1973 requesting this Government to prepare a list of Backward Communities on the basis of economic backwardness ?**

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், சர்க்கார் இந்தப் பின்தங்கிய வகுப்பு என்று சொல்வது சோசியல் பேக்வார்ட்டாக இருப்பவர்களுக்கா அல்லது பொருளாதாரத் துறையில் பேக்வார்ட்டாக இருப்பவர்களுக்கா ? ஏனென்றால், பர்ஸ்ட் கிரேடு உத்யோகத்திற்குப் போகிறவர்கள் எம்.ஏ., பி.ஏ. பட்டம் பெற்றவர்களாக இருக்கவேண்டும். அதற்கு ரூ. 20,000, ரூ. 30,000 செலவாகும். அப்படிப்பட்ட வசதியில் இருப்பவர்களுக்கும் இப்படிப்பட்ட சலுகை அளிக்கவேண்டுமா ? பொருளாதார அடிப்படையில் ஏன் செய்யக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இது பற்றி இந்த அவையில் அரசின் சார்பில் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. பொருளாதார அடிப்படையில்தான் நாடும் மக்களும் முன்னேற வேண்டுமென்ற கொள்கையை அரசு புறக்கணிக்கவில்லை. ஆனால், சாதி, மத, சமயத்தின் பேரில் நீண்ட நெடுங்காலமாக அடிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கு சாதி, சமயத்தின்பேரில் உள்ள தாழ்ந்த நிலையை உயர்த்துவதற்காக, குறிப்பிட்டுள்ள காலம் வரையில் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சில வாழ்க்கை வசதிகளை வழங்குவதில் குறை கூறுவதை முன்னேற்றமடைந்த மக்கள் கைவிடவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.